__டிரினிடி மகளிர் கல்லூரி மாணவியர் - சித்தர் மலையில் விதைப்பந்து தூவும் நிகழ்வு__

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வேதியியல் துறை மாணவியர் 18.11.2022 அன்று நாமக்கல் அருகே வகுரம்பட்டி ஊராட்சி எல்லைக்குட்பட்ட சித்தர்மலையில் விதைப்பந்து தூவினர்.

தற்போது பருவ மழை நாமக்கல் சுற்று வட்டாரப் பகுதிகளில் நன்றாக பெய்துள்ளதால் பூமி பசுமையாகக் காட்சியளிக்கிறது. எனவே, பூமியினை மேலும் பசுமையாக்கும் விதமாக இக்கல்லூரி மாணவியர் மா, கொய்யா, புங்கை, வாழை, சப்போட்டா, புளி, வேப்பம், புடலை, அவரை, முருங்கை, பாவக்காய், கீரை விதைகள், செவ்வரளி, வெள்ளை அரளி ஆகியவற்றினைக் கொண்டு விதைப்பந்து தயார் செய்து சித்தர்மலையில் மிகவும் ஆவலுடன் தூவினர்.

மேலும், இம்மலையில் அமைந்துள்ள ஈஸ்வரன் கோவிலில் சிவபெருமானை வழிபட்டனர்.

இந்நிகழ்வில் வேதியியல் துறைப் பேராசிரியைகள் என். சாந்தி, வீ. இந்திரகுமாரி, எஸ். அனிதா, எஸ். கலைவாணி, ஆய்வக உதவியாளர் ஜி. மகேஷ் மற்றும் 100-க்கும் மேற்பட்ட மாணவியர் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்டு விதைப்பந்து தூவும் நிகழ்வில் ஈடுபட்டனர்.

19.11.2022

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.